16.04.2026

O.S.No. 14/2024

PW1– சிந்து – த/பெ. ஆறுமுகம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.04.2026

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் 19.04.2004 தேதியில் பிறந்தேன். நான் பி.எஸ்.சி. கம்யூட்டர் சயின்ஸ் பராசக்தி கல்லூரியில் படித்துமுடித்தேன். நான் 12ம் வகுப்பு ராமசாமிபள்ளியில் 2021ம் ஆண்டு படித்து முடித்தேன். எனது கல்லூரி மற்றும் பள்ளி சான்றிதழில் எனது பிறந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது

2. ஆதார் அடையாள அட்டையில் குறிப்பிட்டுள்ள எனது பிறந்த தேதி சரியானது கிடையாது என்றும், கல்விசான்றிதழில் உள்ளதுதான் சரியானது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனது மூத்த சகோதரர் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகளும் ஒரே வீட்டில் தான் குடியிருந்துவருகிறோம் என்றால் சரிதான், ஒன்றாக தான் குடியிருந்து வருகிறோம்.

3. என்னுடைய பங்கு எனக்கு வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தையுடன் உடன்பிறந்தவர்கள் கைலாசவடிவு, பழனிச்சாமி, சொர்ணவிநாயகம் மற்றும் சகோதரி ராமலட்சுமி ஆகியோர்கள். எனது தந்தைக்கு நானும், 2ம் பிரதிவாதியும் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரிதான்.

4. எனது தந்தைக்கு பிராது தபசில் சொத்து பாகம் மூலம் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். எனது தந்தைக்கு எந்த ஆண்டு சொத்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது. எனது தாத்தாவிற்கு எவ்வளவு சொத்துக்கள் என்று எனக்கு தெரியாது. எனது தாத்தாவின் சொத்து தான் எனது தந்தை, சித்தப்பாவிற்கு கிடைத்த சொத்து.

5. எனது தாத்தா நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். ஆறுமுகச்செட்டியாரும் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். எனது தாத்தாவின் காலத்தில் நடைபெற்ற பாகப்பிரிவினைகள் எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது பெற்றோர் சொல்லி எனக்கு விவரம் தெரிந்த காலத்தில் இருந்து தெரியவந்தது.

6. எனது தந்தைக்கு எனது தாத்தாவின் சொத்தில் 6ல் 1 பங்கு உள்ளது என்றால் சரிதான். எனது தந்தைக்கு நஞ்சை, புஞ்சை மற்றும் வீடுகள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நஞ்சை புஞ்சையை எனது தந்தை விற்றுவிட்டார். அதை எப்போது விற்றார் என்று எனக்கு தெரியாது. இந்து வாரிசுரிமைப்படி விற்ற சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

7. எனது கட்சிப்படி எனக்கு 18ல் 1 பங்கும், 2ம் பிரதிவாதிக்கு 18ல் 1 பங்கும், 3ம் பிரதிவாதிக்கு 18ல் 1 பங்கும் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தைக்கு கிடைத்த 6 ல் 1பங்கில் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

8. எதற்காக இந்த சொத்து நீதிமன்றம் மூலம் ஏலம்விடப்பட்டது என்றால் எனது தந்தையின் கடனுக்காக. கடன் தொகை எவ்வளவு என்றால் ரூ.80 ஆயிரம் என்று சொன்னார்கள். கடன் வாங்கும்சமயத்தில் என் தந்தை என்ன தொழில் செய்துவந்தார் என்றால் எனக்கு தெரியாது.

9. எனது தந்தை 1ம் பிரதிவாதியிடம் 1999 ல் 5 கடனுறுதிச்சீட்டு மூலம் கடன்பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கடனை வசூல் செய்ய 1ம் பிரதிவாதி என் தந்தை மீது அ.வ.எண்.42/2004 தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு 2004 ல் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான் . நான் பிறந்த சமயத்தில் வழக்கு தீர்ப்பானது என்றால் சரிதான்.

10. எனது சகோதரி ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. அவர் என்னுடன் தான் நீதிமன்றம் வந்துள்ளார், அவருக்கு திருமணமாகிவிட்டது. அவர் கோயம்புத்தூரில் வசித்துவருகிறார்.

11. நான் வழக்கில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் வழக்கறிஞர் நடராஜரிடம் இருந்து தான் வாங்கினேன். அவர்தான் என் தந்தைக்கும் அ.வ.எண்.42/2004 ன் வழக்கறிஞர் என்றால் சரிதான். என் தந்தைக்கு எந்த கெட்டப்பழக்கமும் கிடையாது.

12. என் தந்தை பொதுகுடும்ப செலவுக்காக தான் கடன் வாங்கினார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது சித்தப்பா பழனிச்சாமி அ.வ.எண்.129/2009 என்ற வழக்கில் 2 ம் பிரதிவாதியாக இருந்து

எதிர்வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் பிராது தபசில் சொத்து குடும்ப சொத்து என்று எந்த கட்சியும் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது. அதில் அவர் என்ன கட்சி செய்தார் என்றும் எனக்கு தெரியாது. எனது தந்தையோ, அவரது உடன்பிறந்தவர்களோ முன்வழக்குகளில் பிராதுதபசில் சொத்து பொது குடும்ப சொத்து என்று எந்த கட்சியும் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

13. எனது சகோதரிக்கு 2ம் பிரதிவாதியின் வழக்கின் விவரம் தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 2011ல் முன்வழக்கில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வை செய்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது.

14. எனது தாய்க்கு வழக்கின் முழுமையான விவரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது தாய், தந்தைக்கு இடையே சாதாரண கணவன், மனைவி போல் பேச்சுவார்த்தை கிடையாது. முதல்நிலை தீர்ப்பாணை கிடைத்தபிறகு 1ம் பிரதிவாதி, எனது தந்தைக்கும், அவரது உடன்பிறந்தவர்களுக்கும் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அதற்கு எனது சித்தப்பா பழனிச்சாமி பதில்அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

15. 3ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் 1ம் பிரதிவாதிக்கு தீர்ப்பின்பலன்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக, கால நீட்டிப்பு செய்வதற்காக வம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால்

சரியல்ல. எனவே என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னை சட்டவிரோதமாக காலி செய்ய முயற்சி செய்தார் என்றால் சரிதான், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. என்னுடைய வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**